பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 08 2026 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தென்மேற்குப் பருவமழையால் பாதிக்கப்படும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில் மாநில பேரிடர் மீட்பு நிதி வழங்குவதற்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- தரமான சுகாதார சேவைகள் வழங்குவதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.
- தென் அமெரிக்கா நாடான பெருவில், சிறிய ரக பயணியர் விமானம் விபத்துக்குள்ளானதில், 13 பேர் உயிரிழந்துள்ளனர்.
- கேரளா, கர்நாடகா, மணிப்பூர், நாகாலாந்து உள்ளிட்ட மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் இன்று கன முதல் அதிகன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- BONN ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - விஜய் சுந்தர் பிரஷாந்த் இணை, சாம்பியன் பட்டம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தென்மேற்குப் பருவமழையால் பாதிக்கப்படும் மாநில அரசுகளுக்கு உதவிடும் வகையில் மாநில பேரிடர் மீட்பு நிதி வழங்குவதற்கு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஒப்புதல் வழங்கியுள்ளார்.

நடப்பாண்டுக்கான முதல் தவணைத் தொகையாக 7 மாநிலங்களுக்கு மொத்தம் 2 ஆயிரத்து 117 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

அருணாச்சலப்பிரதேசத்திற்கு 45 கோடி ரூபாயும், அசாமிற்கு 379 கோடி ரூபாயும், குஜராத் மற்றும் மகாராஷ்டிர மாநிலங்களுக்கு தலா 500 கோடி ரூபாயும் நிதியுதவி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பருவமழை காரணமாக ஏற்படும் வெள்ளப்பெருக்கு குறித்து மாநில அரசுகளுடன் இணைந்து மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், பாதிக்கப்படும் மாநிலங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 7 மாநிலங்களில் ஹிமாச்சலப்பிரதேசம், ஒடிசா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களுக்கு ஏற்கனவே நடப்பாண்டிற்கான முதல் தவணைத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

தரமான சுகாதார சேவைகள் வழங்குவதை மருத்துவமனைகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா வலியுறுத்தியுள்ளார்.

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் “சாரதி” திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான நடைமுறைகள் குறித்து அவரது தலைமையில் புதுதில்லியில் நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

மருத்துவர்கள் சுகாதார சேவைகளில் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக அவர்களுக்கு உதவிடும் வகையில் இந்த சாரதி திட்டம் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்று அவர் கூறினார்.

நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறைகள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ சேவைகளுக்கு பயிற்சி பெற்ற இளம் தன்னார்வலர்களை ஈடுபடுத்தும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாக திரு. நட்டா கூறினார்.

<<<<>>>>

உஸ்பெகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் திரு Saidov Bakhtiyor Odilovich நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அவரது இந்தப் பயணத்தின் போது, குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆகியோரைச் சந்தித்து பேசுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் நடைபெறும் இந்தியா - உஸ்பெகிஸ்தான் வர்த்தக மன்றக் கூட்டத்திலும் திரு Saidov Bakhtiyor Odilovich பங்கேற்கவுள்ளதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<>>>>

தில்லியில் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தப் பணிகளின் ஒரு பகுதியாக இதுவரை 85 லட்சத்து 81 ஆயிரத்து 920 படிவங்கள் பெறப்பட்டுள்ளதாக தில்லி தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் வாக்காளர்களை உறுதி செய்யும் வகையில் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பணியில் 13 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த படிவங்கள் வழங்கும் பணி அடுத்த மாதம் 8-ம் தேதி வரை நடைபெறும் என்றும் மாநில தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தென் அமெரிக்கா நாடான பெருவில், Nazca நகர் அருகே நேற்று சிறிய ரக பயணியர் விமானம் விபத்துக்குள்ளானதில், 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுற்றுலா செலவதற்காகப் பயன்படுத்தப்படும் இந்த விமானத்தில், 11 பயணிகள் மற்றும் 2 விமானிகள் பயணம் செய்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Pisco விமான நிலையத்தை இருந்து புறப்பட்ட சில நிமிடங்களுக்குள் அந்த விமானத்துடனான தொடர்பு துண்டிக்கப்பட்டதாகவும், விபத்திற்கான காரணம் கண்டறியப்படவில்ல என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

ஹோர்முஸ் பகுதியில் கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல்களை நிறுத்தி பேச்சுவார்த்தைக்கு திரும்பும் வரை, அமெரிக்கா தொடர்ந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

ஈரான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால், மேற்கு ஆசியாவில் உள்ள இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்குச் சொந்தமான எரிசக்தி நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

குவைத்தில் உள்ள எரிசக்தி நிலையங்களைக் குறிவைத்து நடத்தப்படும் ட்ரோன் தாக்குதலை வானிலேயே இடைமறித்து அழித்ததாக குவைத் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ரஷ்யா தலைநகர் மாஸ்கோவில் உள்ள உணவகத்தில் நடந்த குண்டு வெடிப்பில் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். 21 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தில் உயிரிழந்த அடையாளம் தெரியாத பெண் ஒருவர் வெடிபொருட்களைக் கொண்டு வந்ததாக அந்நாட்டு செய்தி முகமைகள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

<<<<>>>>

கேரளா, கர்நாடகா, மணிப்பூர், நாகாலாந்து உள்ளிட்ட மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் இன்று கன முதல் அதிகன மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தில்லி, ஹரியானா, பஞ்சாப், சண்டிகட், உத்தராகண்ட், ஹிமாச்சலப்பிரதேசம், மேகாலயா, அருணாச்சலப்பிரதேசம், குஜராத், ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களின் ஒருசில இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீர், லடாக், தெலங்கானா, மத்தியப்பிரதேசம், தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களில் ஓரிரு இடங்களில் இன்றும் நாளையும் இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

அரபிக் கடல் பகுதியில் இம்மாதம் 3-ம் தேதி வரை மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனிடையே கேரளாவில் பெய்து வரும் கனமழை காரணமாக கோட்டயம், இடுக்கி, மலப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அம்மாநிலத்தில் உள்ள 5 மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை விடப்பட்டுள்ளதையடுத்து, பாதிக்கப்பட்ட பகுதிகளில் 65 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு ஆயிரத்து 400க்கும் அதிகமான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

கனமழை காரணமாக பம்பை நதியில் வெள்ளப்பெருக்கு அதிகரித்துள்ளதால் சபரிமலைக்குச் செல்லும் யாத்ரீகர்கள் இம்மாதம் 3-ம் தேதி வரை பயணத்தை ஒத்திவைக்குமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

02 08 2026 7 15 Weather-2

BONN ஓபன் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - விஜய் சுந்தர் பிரஷாந்த் இணை, சாம்பியன் பட்டம் வென்றது.

ஜெர்மனியில் நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 7-6, 6-3, என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் Scott Duncan - ஸ்வீடனின் Adam Heinonen இணையை வென்று இப்பட்டத்தைக் கைப்பற்றியது.

<<<<>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில், இந்தியா மேலும் 5 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

கிளாஸ்கோவில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், மகளிர் குத்துச்சண்டை போட்டியில், ஆடவர் 80 கிலோ எடைப் பிரிவில், இந்தியாவின் Angush Panghal-ம், 60 கிலோ எடைப் பிரிவில், Sachin Siwach-ம் தங்கப் பதக்கம் வென்றனர்.

மகளிர் 51 எடைப்பிரிவில், இந்தியாவின் Sakshi Chaudhary-ம், 60 கிலோ எடைப்பிரிவில், Priya Ghanghas-ம், 70 கிலோ எடைப்பிரிவில், Arundhati Choudhary-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

ஆடவர் 10 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வென்று Gulveer Singh சாதனை படைத்துள்ளார்.

பாரா ஆடவர் குண்டு எறிதலில், இந்தியாவின் Soman Rana வெள்ளிப் பதக்கமும், Shubham Juyal வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இதுவரை இந்தியா 13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் 4வது இடத்தில் உள்ளது.

இப்போட்டியில் பதக்கம் வென்றுள்ள வீரர், வீராங்கனைகளுக்கு குடியரசுத்தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர், மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

TAIPEI ஓபன் பேட்மின்டன் போட்டியின் இன்று நடைபெறும் இறுதியாட்டத்தில், இந்தியாவின் Tanvi Sharma, வியட்நாமின் Thuy Linh NGUYEN-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

துரந்த் கோப்பை கால்பந்து போட்டி அசாம் மாநிலம் குவஹாத்தியில் நேற்று தொடங்கியது.

அசாம் மாநிலத்தின் கலாச்சாரா மரபுகளை எடுத்துக்காட்டும் வகையில், கண்கவர் நிகழ்ச்சிகளுடன் இப்போட்டித் தொடங்கியது.

இந்தப் போட்டியை ராணுவமும், அசாம் மாநில அரசும் இணைந்து நடத்துகின்றன.

முதலாவது போட்டியில், ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி 6-0 என்ற கோல் கணக்கில் போடோலாந்து அணியை வென்றது.

<<<<>>>>

தெற்காசிய கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டி, டாக்காவில் நவம்பர் 4-ம் தேதி தொடங்கி 17-ம் தேதி வரை நடைபெறவுள்ளது.

நவம்பர் 5-ம் தேதி நடைபெறும் போட்டியில், இந்திய அணி - மாலத்தீவு அணியையும், 11-ம் தேதி நடைபெறும் போட்டியில், பாகிஸ்தான் அணியையும் எதிர் கொள்கிறது.

தெற்காசிய கால்பந்துப் போட்டியில் இந்தியா இதுவரை ஒன்பது முறை சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.

**<<<<>>>>**